**இலங்கை திறந்த பல்கலைக்கழகம் - 2017**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக் கழக அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(1) உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 111 ஆம் பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

(i) நியமத்தின் 70 பந்தியின் பிரகாரம் நடைமுறை மற்றும் நமைமுறை அல்லாத பொறுப்புக்கள் நிதிக் கூற்றுகளின் முகப்பில் வேறாக வகைப்படுத்தல் ஒன்றாக சமர்பிக்கப்பட வேண்டும் எனினும் பணிக் கொடை ஒதுக்கங்கள் அவ்வாறு வகைப்படுத்திக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 48 பந்தியின் பிரகாரம் கணக்கீட்டு நியமங்களின் மூலம் தேவைப்படும் அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ள சந்தர்பங்கள் தவிர வருமானங்கள் மற்றும் செலவுகளை பதிலீடு செய்யக் கூடாது எனினும் மீளாய்வாண்டு தொடர்பாக கிடைத்திருந்த பட்டமளிப்பு விழாவின் புகைப்படங்கள் எடுத்தல் மற்றும் வீடியோ பிடித்தல் மற்றும் ஆய்வு நடைமுறை சார் பாடநெறியில் இருந்து கிடைத்திருந்த வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 7,752,150 தொகை மற்றும் அவற்றின் செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 2,658,283 தொகையினை ஒன்றிற்கு ஒன்று பதிலீடு செய்து நிதிக் கூற்றுகளின் தேறிய பெறுமதியாகிய ரூபா 5,093,867 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(i) பல்கழைக்கழகத்தின் சொத்துக்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை மீள்மதிப்பீடு செய்யப்படுவதற்காக பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தி இருக்காததுடன் குறிப்பிட்ட காலப் பகுதியில் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யப்படாமையின் காரணத்தினால் ரூபா 8,710,099,611 கிரயத்திற்கான ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுகளின் மூலம் பிரதிபழித்திருக்கவில்லை.

(ii) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட ரூபா 678,909,611 தொகை கிரயத்தையுடைய நிலையான சொத்துக்கள் நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் நியமத்தின் 65 பந்தியின் பிரகாரம், இந்த சொத்துகளில் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் சொத்துக்களின் ஆக்கபூர்வமான வாழ்க்கை காலத்தை மீண்டும் மீளாய்வு செய்து அதன் பிரகாரமான மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 10**

நியமத்தின் 19 மற்றும் 20 பந்திகளின் பிரகாரம், சேவைகள் வழங்குதல் உட்பட கொடுக்கல் வாங்கல்களின் விளைவுகள் நம்பிக்கை தன்மையுடன் மதிப்பீடு செய்ய இயலுமான போது அறிக்கையிடும் திகதியில் கொடுக்கல் வாங்கல்களின் முடிவு நிலைமையை கவனத்தில் எடுத்து வருவாயை இனங்காண வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது அத்தேவை பூர்த்தி செய்யும் குறுகிய கால பாடநெறிகளின் கட்டணம் என கிடைத்திருந்த ரூபா 7,751,070 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென இனங்கண்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) காணிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் கணக்கீட்டு கொள்கைகளை கடைபிடிக்கப்பதாக பணிப்பாளர் சபையினால் கடைபிடித்திருந்த போதிலும் அந்த கொள்கை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தல் மற்றும் ஒரே சீராக கடைபிடித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) செயற்பாட்டு லீஸின் அடிப்படையில் அனுபவிக்கும் காணிகள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு ஒன்றின் மூலம் மாத்திரம் வெளிப்படுத்தல் பல்கலைக் கழகத்தின் கணக்கீட்டு கொள்கையாக இருந்த போதிலும் 30 வருட குத்தகையின் கீழ் பெற்றிருந்த கம்பஹா கல்வி நிலையம் நடாத்தப்படும் காணி தொடர்பாக அவ்வாறு செயற்படாமல் அதனது பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி ரூபா 42,000,000 தொகை நிதிக் கூற்றுகளில் காணிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) ஏதேனும் ஒரு காணியின் சட்டரீதியான உரிமை காணப்படாத போதிலும் அதனை அனுபவித்தல் 10 வருடங்களை விட கூடிய காலம் பூராகவும் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாக காணப்படின் மற்றும் அந்த காணியில் பல்கலைகழகத்தினால் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தால் அவற்றின் மீள் மதிப்பீட்டு பெறுமதியை கணக்கீடு செய்தல் பல்கலை கழகத்தின் கொள்கையாக இருந்தது. எனினும் 10 வருடங்களை விஞ்சியுள்ள மற்றும்

கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த அனுராதபுரம், குருநாகல், அம்பாறை மற்றும் அம்பலாங்கொடையில் அமைந்துள்ள குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த காணிகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நூலக கட்டிடத்தினை நவீனமயப்படுத்தல் மற்றும் மின்வயர் இழுத்தல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த முறையே 2,529,788 தொகை மற்றும் ரூபா 3,892,698 தொகை மற்றும் அலுவலகத்தை பிரிவிடுவதற்கான மேற்கொள்ளப்பட்ட ரூபா 9,252,211 தொகை ஆக மொத்த ரூபா 15,674,697 இற்கான மூலதன தன்மையுள்ள செலவுகள் வருவாய்ச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மத்திய புத்தகங்கள் வினியோகிக்கும் அலகில் வருட இறுதி இருப்பு பெறுமதியினை கணிக்கும் போது 19,582 இற்கான புத்தகங்களின் கிரயத்தை கணித்திருக்காமையால் நிதிக் கூற்றுகளில் இருப்புகளின் பெறுமதி அப்புத்தகங்களின் பெறுமதிக்கு சமமான தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) இரத்தினபுரியில் அமைந்துள்ள காணி ஒன்றினை பல்கலைக்கழகத்திற்கு உரித்தாக்குவதற்காக 2011 ஆகஸ்ட் 09 ஆம் திகதி அதனது பெறுமதி மதிப்பீட்டு பெறுமதியில் 25 சதவீதம் என செலுத்தியிருந்த ரூபா 443,750 தொகை நிதிக் கூற்றுகளில் முற்பணம் எனக் கணக்கீடு செய்வதற்கு பதிலாக செலவு ஒன்று என கணக்கீடு செய்திருந்த காரணத்தினால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 443,750 இனால் குறைவாக காட்டியிருந்தது.

(ஈ) 2018 ஆண்டிற்காக செலுத்தியிருந்த ரூபா 342,168 கட்டிட வாடகை மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது, பட்டமளிப்பு விழாவில் அசையாத புகைப்படங்கள் பிடித்தல் மற்றும் வீடியோ பண்ணுதல் ஆகியவற்றிற்காக கிடைத்திருந்த ரூபா 3,401,070 தொகை மற்றும் ஆய்வு நடைமுறைசார் பாடநெறியில் இருந்து கிடைத்திருந்த ரூபா 248,520 தொகை ஆக கூட்டுத் தொகை ரூபா 3,649,590 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானம் என நிதிக் கூற்றுகளுக்கு எடுத்திருக்கவில்லை.

**2.2.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டு கணக்குகள்**

---

நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் மத்திய புத்தக வினியோக அலகிற்கான இருப்பு மீதி மற்றும் பேரேட்டு கணக்குகளின் பிரகாரம் காணப்பட்ட இருப்பு மீதி இடையே மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளிடையே முறையே ரூபா 47,770,990 மற்றும் ரூபா 41,245,622 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிராந்திய மற்றும் கல்வி 8 (அநுராதபுரம், யாழ்பாணம், வவுனியா, திருகோணமலை, பொலனறுவை, கிளிநொச்சி, குளியாப்பிட்டி மற்றும் புத்தளம்) நிலையங்களில் வார நாட்களில் மற்றும் வார இறுதி நாட்களில் விரிவுரைகள் நடாத்துதல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) நாவல வளாகத்தை சேர்ந்த காணிகள் மற்றும் பிராந்திய நிலையங்களின் 18 காணிகள் ரூபா 4,427,100,000 தொகைக்கு பெறுமதி மதிப்பீடு செய்திருந்த போதிலும் அப் பெறுமதி கணிக்கப்பட்ட முறை அதாவது ஒரு பர்சஸின் பெறுமதி பர்சஸ்களின் எண்ணிக்கை ஆகியவாறு ஒட்டு மொத்த பெறுமதி தொடர்பான விவரங்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1988 ஆண்டு முதல் 2000 ஆண்டு வரை பிணைமுறி உடன்படிக்கைகளை மீறிய கல்விசார் மற்றும் கல்விசாரா 14 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 48,085,752 தொகையில் இருந்து மீளாய்வாண்டு வரை பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதேபோல பிணைமுறி உடன்படிக்கைகளை மீறிய மேலும் கல்விசார்/கல்வி 14 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 29,860,739 தொகைக்கான மொத்த உடன்பட்ட பெறுமதியில் ரூபா 20,699,396 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பதவியணியில் 51 பேரிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்படாமல் காணப்பட்ட ஊழியர் கடன் மீதி ரூபா 1,806,518 தொகையாக காணப்பட்டதுடன் அதில் நிறுவனத்தை விட்டுச் சென்றுள்ள 47 பதவியணியினரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,613,208 தொகையும், தாபன கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்த நான்கு உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 193,310 இற்கான தொகையொன்றும் காணப்பட்டது. குறிப்பிட்ட கடன் தொகையை அறவீடு செய்வதற்காக போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறை பொறுப்புகளின் கீழ் பிற்போடப்பட்ட குறுகிய கால வருமானம் என ரூபா 6,829,000 தொகை குறிப்பிட்டிருந்த போதிலும் அவற்றில் மீளாய்வாண்டிற்கான வருமானத்தை இனங்கண்டு வருமானத்திற்கு எடுத்திருக்காததுடன் கணக்காய்வுச் சந்தர்ப்பமாகிய 2018 ஜுன் 30 திகதி வரை ரூபா 1,868,000 தொகை மாத்திரமே இனங்காணப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இனக்கமின்மை சந்தர்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) | நிதிப் பிரமாணம் 751(1) | தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்டிருந்த பாடநெறி புத்தகங்கள் மற்றும் கல்வி பண்டங்கள் தொடர்பாக பிராந்திய கல்வி நிலையங்களில் இருப்பு புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 772 மற்றும் 773 | உலோகப் பொருட்கள் தவிர தகுதியற்றவை என வெளிப்படுத்தியுள்ள ஏனைய பண்டங்களை பொருத்தமான நடவடிக்கை எடுத்து அகற்றப்பட வேண்டுமெனினும், பிராந்திய மற்றும் கல்வி நிலையங்களின் வருடாந்த பண்டக் கணிப்பீட்டின் பிரகாரம் இனங்காணப்பட்ட அவ்வாறான பண்டங்களை அகற்றுவதற்கு அல்லது திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 2015 ஜுலை 14 ஆம் திகதி 3/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்யையின் பிரகாரம் நிமித்த முற்பணங்கள் அவை வழங்கப்பட்ட கருமம் முடிவடைந்த உடனேயே தீர்க்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த ரூபா 133,584 தொகை பெறுமதியான 11 முற்பணங்கள் அவ்வாறு தீர்க்கப்பட்டிரு க்கவில்லை. |
| (இ) | பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங் களுக்காக தாபனக் கோவையின் | |
| (i) | அத்தியாயம் xx பந்தி 3.1 | பல்கலைக்கழகத்தின் கல்விப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்காக தின வரவுப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | அத்தியாயம் xxvi பிரிவு 3.2 மற்றும் 3.3 | வருடாந்த பண்டக் கணிப்பீட்டின் மூலம் இனங்காணப்பட்ட நிலையான சொத்துக்கள் காணாமல் போனமை தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பின்னர் குறிப்பிட்ட பற்றாக்குறைக்கு, காணாமல் போதமைக்கு அல்லது நட்டத்திற்கு பொறுப்பு சொல்ல வேண்டிய நபரை கண்டறிந்து அந்த நபரிடம் அதனை நிறுவுவதற்கான பெறுமதியை அறவிடப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செற்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | மதியஉரை சேவை மற்றும் வெளிமூலவள நிலையங்கள் தொடர்பாக 2014 துணை சட்டத்தின் பிரிவு 3.3 | ஒவ்வொரு பாட நெறிகளினதும் முன்னேற்றம் தொடர்பாக அறிக்கையொன்று மதிஉரை சேவை மற்றும் வெளி மூலவள நிலையக் குழுவிற்கு சமர்பிக்கபப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டிற்கான முன்னேற்ற அறிக்கைகள் அவ்வாறு சமர்பித்திருக்கவில்லை. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 125,553,169 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 164,821,885 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 290,375,054 இனால் வளர்ச்சியடைந்திருந்தது.

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் கல்விச் சேவை செலவு ரூபா 199,394,011 இனால் அதிகரித்திருந்த போதிலும் மீண்டு வரும் செலவுகளுக்கான அரச மானியம் ரூபா 112,575,000 இனால் மற்றும் மாணவ வருமானம் ரூபா 388,412,366 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாகியிருந்தது.

மீளாய்வாண்டினும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் நிதி விளைவுகளில் மிகை ஒன்று ஏற்பட்டிருந்த போதிலும் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்ததுடன் மீண்டும் மீளாய்வாண்டின் போது மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துகளுக்கான பெறுமானத் தேய்வு மற்றும் அரசுக்கு செலுத்தப்பட்ட வரி மீண்டும் சீராக்கல் செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 1,457,733,184 தொகைக்காக நிறுவனத்தின் பங்களிப்பு முரண்களுடன் மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 1,939,037,275 தொகை வரை வளர்ச்சி அடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்பித்திருந்த போதிலும் குறிப்பிட்ட திட்டங்களைப் பயன்படுத்தி நிறுவனத்தின் ஒட்டுமொத்த குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளல் தொடர்பாக உயர்மட்ட முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், கூட்டிணைந்த திட்டம் 04 வருடங்களுக்கு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2003 ஜுன் 02 ஆம் திகதி பீஈடீ/12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 இன் பிரகாரம் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறந்த பல்கலைக்கழகத்திற்காக விரிவுரையாளர்கள் சேர்த்துக் கொள்ளும் போது மற்றும் ஏனைய நலன்கள் வழங்கும் போது ஏனைய பல்கலைக் கழகங்களின் மாதியே செயலாற்றியிருந்த போதிலும் திறந்த பல்கலை கழகத்தின் விரிவுரைகள் நடாத்துதல் அனேகமாக வார இறுதி நாட்களில் நடைபெறுவதன் காரணத்தினால் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் என்பவற்றிற்கு மேலதிகமாக விரிவுரைகளுக்காக மேலதிகக் கொடுப்பனவு வழங்குவதற்கு நேரிட்டிருந்தது. கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது பல்கலைக்கழகங்கள் 2016/2017 ஆண்டுகளில் 15 நிலையங்களில் வார நாட்கள் மேற்கொள்ளப்பட்ட விரிவுரை மணித்தியால எண்ணிக்கை 10,776 தொகை ஆக காணப்பட்டதுடன் நடத்தப்பட்ட வார இறுதி விரிவுரை மணித்தியால எண்ணிக்கை 29,320 ஆகும். அதன் பிரகாரம் மொத்த விரிவுரை மணித்தியாலங்களில் 73 சதவீதமும் வார இறுதி நாட்களில் நடாத்தப்பட்டிருந்ததுடன் வார நாட்களில் நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியால எண்ணிக்கை 26 சதவீதமாகும்.

(ஆ) பல்கலைக்கழக கல்வி விதிமுறைக் கோவையின் (Norms) இன் பிரகாரம், பொதுவாக 4 வருடங்களுக்கு ஒரு முறை அனைத்து பாடநெறிகளும் மீண்டும் திருத்தப்பட்டு நாளதுவரை ஆக்கப்பட வேண்டுமெனினும் பல்கலைக் கழகத்தின் அனேகமான பாடநெறிகள் தொடர்பாக அவ்வாறான திருத்தங்கள் (Course Revise) மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் தாமத காலம் 02 வருடங்கள் முதல் 24 வரை உயர்ந் வீச்சினை கொண்டிருந்தது. எவ்வாறாயினும், பாடநெறிகளஜர' திருத்தங்கள் வெளிசாரார் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக 2017 ஆண்டின் போது ரூபா 736,465 தொகை செலுத்தியிருந்த போதிலும் கல்வி பதவியணியினரால் பாடநெறிகளின் திருத்தங்கள் போன்ற அலுவல்கள் ஈடுபடுதல் மற்றும் விரிவுரை நடாத்துதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.

(இ) ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து பெற்றிருந்த ரூபா 9,000 மில்லியன் இற்காக கடன் உதவி மீது தொலை கல்வி நவீன மயப்படுத்தல் செயற்திட்டம் திறந்த பல்கலைகழகத்தினை மையப்படுத்தி 2003 ஆண்டின் போது உயர் கல்வி அமைச்சினால் செயற்படுத்தி இருந்ததுடன் செயற்திட்டத்தின் அலுவல்களை முன் எடுத்துச் செல்வதற்காக தேசிய நிகழ்வு நிலை தொலை கல்வி சேவை 2010 ஆண்டின் போது நிறுவப்பட்டிருந்தது. 2015 மார்ச் 01 திகதி அளவில் செயற்திட்டத்தின் நிருவாக அலுவல்கள் திறந்த பல்கலைகழகத்திற்கு சாட்டப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) செயற்திட்டத்தின் நிருவாக அலுவல்கள் திறந்த பல்கலைகழகத்திற்கு சாட்டப்பட்டு 2015 மார்ச் 01 திகதி அளவில் 04 பிரதி பணிப்பாளர்கள், உற்பட கணிணி அறிவு உடைய 61 உத்தியோகத்தர்கள் இந்த செயற்திட்டத்தில் செயலாற்றியுள்ளனர் எனினும் அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் பதவியனியினரை திறந்த பல்கலை கழகத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையினல் இந்த செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்டிருந்த 03 பிரதி பணிப்பாளர்கள் உட்பட 30 உத்தியோகத்தர்கள் நிறுவனத்தை விட்டு சென்றுள்ளனர்.

(ii) தொழில் நுட்ப வசதிகளை பயன்படுத்தி வெளிசாராருக்கு சேவை வசதிகள் வழங்குவதன் மூலம் இந்த செயற்திட்டத்தின் முலம் 2011 முதல் 2013 ஆண்டு வரை கூட்டுத்தொகை ரூபா 100,757,839 தொகை உழைத்திருந்த போதிலும் அமைச்சின் நிருவாகத்திற்கு வெளியே திறந்த பல்கலைகழகத்திற்கு செயற்திட்டத்தை ஒப்படைக்கப்பட்ட பின்னர் 2014 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 7,137,587 தொகை வரை விரைவாக குறைவடைந்திருந்ததுடன் 2017 ஆண்டின் போது வருமான ஏதும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் மூலம் செவிப்புல கட்புல தொடர்பாக கருத்தரங்கு ஒன்று நடாத்தியதற்கான சான்றுகள் சமர்பிக்கப்பட்டிருக்காததுடன் குறிப்பிட்ட செயற்திட்டம் தோல்வி அடைவதற்கான தாக்கத்தை ஏற்படுத்தி அடிப்டை காரணமொன்றாக தொழில்நுட்ப உபகரணங்கள் காலவதியாகி இருத்தல் மற்றும் அவற்றை திருத்துவதற்காக நிதி ஏற்பாடுகள் வழங்குவதற்கு அமைச்சு இணக்கம் தெரிவித்திருந்த போதிலும் பின்னர் அந்த பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை ஆகும் என உபவேந்தர் கடந்த கணக்காய்வு அறிக்கைகளுக்கு பதில் ஆக அறிவித்திருந்தார்.

(iii) திறந்த பல்கலைகழகத்தை மையப்படுத்தி பாரிய செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு நிறுவப்பட்டிருந்த இந்த செயற்திட்டத்தின் மூலம் நிறுவனத்தின் அடிப்படை குறிக்கோள் ஒன்றாகிய தொலை கல்வியை நவீன தொழில்நுட்பத்ததை பயன்படுத்தி வழங்குவதன் மூலம் பலமான பங்களிப்பு ஒன்றினை பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்தது. எனினும் இந்த செயற்திட்டத்தை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்காக நிறுவனத்தின் உயர் முகாமைத்துவம் போதியளவு கவனம் செலுத்தி இருக்கவில்லை.

(ஈ) இலங்கையின் உயர் கல்வியின் கொள்திறனை விரிவாக்கல் மற்றும் நாட்டிற்கு தேவையான வித்தில் பண்புசார் உயர் கல்விச் சேவை ஒன்றினை வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டு உயர் கல்வி அமைச்சினால் செயற்படுத்தியிருந்த 21 ஆம் நூற்றாண்டிற்காக உயர்கல்வி (HETC) எனும் செயற்திட்டத்தை திறந்த பல்கலைகழகத்தில் செயற்படுத்துவதற்காக 2011 -2016 வரையான காலப் பகுதியில் ரூபா 18 மில்லியன் தொகை கிடைத்திருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பல்கலைக்கழகங்கள் அபிவிருத்தி மானிய நிதியத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட அடிப்படை பாடநெறி பல்கலைக்கழகத்தில் பட்டக் கல்விகற்கும் அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமான பாடநெறி ஒன்றாகும். எனினும், பீட சபைகளின் விதப்புரையின் மீது பல்கலைக்கழக பேரவையினால் ஒவ்வொரு பட்ட பாடநெறிகளிலும் கட்டாயமான பாடங்கள் தீர்மானிக்கப்பட்டிருந்தது அதன் பிரகாரம், அடிப்படைப் பாடநெறியில் அனைத்து பாடங்கள் தொடர்பான புரிந்துணர்வு மிகவும் முக்கியமாக இருந்த போதிலும் அனைத்து பாடங்களையும் படிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமையால் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றி கொள்ளல் குறைவடைந்திருந்தது.

(ii) பல்கலைகழகங்கள் அபிவிருத்தி மானிய நிதியத்தை பயன்படுத்தி மென்மை திறமைகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 2,175,000 இற்கான செலவில் 5000 கைநூல்கள் அச்சிடப்பட்டிருந்த போதிலும் இந்த பாடநெறி அனைத்து மாணவர்களும் கட்டாயம் ஆக்கப்படாமையால் 2,000 இற்கு குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே இந்த பாடநெறியை படித்திருந்தனர். அதன் காரணமாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,327,620 பெறுமதியான 3,052 புத்தகங்கள் மத்திய புத்தகங்கள் வினியோகிக்கப்படும் அலகில் மீதியாக காணப்பட்டது.

(iii) பல்கலைகழகத்தின் சமூகவியல் கல்விப் பிரிவின் மூலம் வழங்கப்படும் கலை பட்டத்தை மீள்கட்டமைத்தலின் கீழ் 18 பல் ஊடக மற்றும் 9 நிகழ்வு நிலை பாடநெறிகள் 2014 மார்ச் முதல் 09 மாத காலத்துள் தயாரிப்பதற்காக ரூபா 1,800,000 தரம் சார் மற்றும் புதுதன்மையுள்ள மானியத்தின் கீழ் வழங்கியிருந்த போதிலும் செயற்திட்ட காலப் பகுதியில் குறிப்பிட்ட விடயம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) பல்கலைகழகத்தின் ஊடக மாளிகை (CET Me) ஊடாக கற்புல, செவிப்புல கற்றல் உபகரணங்களை உற்பத்தி செய்து டிஜிடல் நூலகம் (Digital Library) வசதிகளின் கீழ் இணையதளத்தின் ஊடாக மாணவர்களுக்கு அந்த கற்பித்தல் உபகரணங்களை பார்பதற்கான சந்தர்பம் வழங்குவது தொடர்பாக செயற்திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கற்புல ,செவிப்புல கற்பித்தல் உபகரணங்கள் 52 இற்கு அண்மித்த தொகையொன்று உற்பத்தி செய்திருந்த போதிலும் செயற்திட்டத்தினால் வழங்கியிருந்த ரூபா 1,940,688 பெறுமதியான Server ஊடாக அந்த ரிஜிடல் நூலக வசதிகள் மாணவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது முகாமைத்துவ தகவல்கள் முறைமையில் ரூபா 6,590,875 இற்கான உயர்த்துதல்கள் (Enhancement) 16 பூர்த்தி செய்வதற்காக தனியார் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருந்ததுடன் முற்பணமாக அக் கம்பனிக்கு 2017 ஆகஸ்ட் 08 திகதி ரூபா 3,298,437 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2018 பெப்ரவரி மாதம் அளவில் இந்த விடயங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும் கணக்காய்வு திகதியாகிய 2018 மே 28 திகதி அளவிலும் பூர்த்தி செய்திருந்தது ரூபா 156,250 இற்கான கிரயத்தை உயர்துதல் ஒன்று மாத்திரம் காணப்பட்டதுடன் தாமதங்கள் தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்காததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் தண்டப் பணம் அறவீடு செய்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முகாமைத்துவ தகவல் முறைமையை பராமரித்தலுக்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு வருடாந்தம் ரூபா 4.5 மில்லியன் வீதம் இடையராது செலுத்தியிருந்த போதிலும் குறிப்பிட்ட தகவல் முறைமையின் ஊடாக சரியான மற்றும் செயற்திறனுள்ள சேவை ஒன்றினை வழங்குவதற்கு அக் கம்பனிக்கு இயலாமல் இருந்ததென அவதானிக்கப்பட்டது. அதேபோல இது தொடர்பாக போதியளவு கட்டுப்பாடு ஒன்று நடைபெற்றிருக்கவில்லை எனவும் சேவையை மதிப்பாய்வு செய்யாமல் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(இ) நிறுவனத்தின் பயன்பாட்டிற்காக பெற்றிருந்த காணிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பல்கலைகழகத்தின் கல்வி மற்றும் பிராந்திய நிலையங்கள் நடாத்தப்படுகின்ற 75 ஏக்கர் அளவை கொண்ட 29 காணிகளில் பல்கலைகழகத்திற்கு சட்டரீதியாக உரித்தாக்கப்பட்டிருந்தவை 53 ஏக்கர்களை கொண்ட 07 காணிகள் மாத்திரமே. மீதியான 22 ஏக்கர்களை கொண்ட 22 காணிகளின் உரிமையை பல்கலை கழகத்திற்கு உரித்தாக்குவது தொடர்பாக உயர் முகாமைத்துவத்தினால் போதிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை மேலும் மாத்தறை, கண்டி, கழுத்துறை மற்றும் கேகாலை ஆகிய பிரதேசங்களில் பல்கலை கழகத்தினால் பயன்படுத்தப்படும் 18 ஏக்கர் காணிகள் உரிமையை பல்கலை கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டு 8 உம் 30 ஆண்டுகள் இடைப்பட்ட கால வீச்சு ஒன்று கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையும் உரித்துறுதிகளை பெற்றிருக்கவில்லை.

(ii) அம்பாறை கல்வி நிலையம் நடாத்தப்படும் 77 பர்சஸ் காணி 2004 செப்டம்பர் 24 திகதி முதல் 30 வருட காலப்பகுதிக்காக குத்தகை அடிப்படையில் பெற்றிருந்ததுடன் அதற்காக 2004 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ரூபா 203,000 தொகை குத்தகை செலுத்தியிருந்த போதிலும் முறையான குத்தகை உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருக்கவில்லை.

(iii) 03 ஏக்கர்களை கொண்டு பதுளை பதுளுபிடிய காணி மற்றும் 62 பர்சஸ்களைக் கொண்ட இரத்தினபுரி காணி பல்கலைகழகத்திற்கு உரித்தாக்குவதற்காக அதனது பெறுமதி மதிப்பீட்டு பெறுமதியில் 25 சதவீதம் வீதம் முறையே 2013 மார்ச் 20 ரூபா 100,000 மற்றும் 2011 ஆகஸ்ட் 09 திகதி ரூபா 443,750 தொகை பிரதேச செயலகத்திற்கு செலுத்தியிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி வரை அக்காணிகளின்

உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை. எவ்வாறாயினும், பதுலுபிடிய காணியை பல்கலை கழகத்திற்கு வழங்க முடியாது என அறிவித்திருந்தமையால் அதற்காக செலுத்தியிருந்த பணத்தை மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு பெற்றுத் தருமாறு பதுளை பிரதேச செயலாளரிடம் கேட்டுள்ளதாக இது தொடர்பான உபவேந்தர் கணக்காய்வுக்கு அறிவித்திருந்தார்.

(ஈ) குறுகிய காலப் பாடநெறிகள் சுய நிதி வழங்கள்களுக்காக கல்வி நிகழ்ச்சி திட்டங்கள் (C-Sap) ஊடாக நடாத்தப்படும் பட்டப் பின் படிப்பு பட்டதாரி பாடநெறிகள் மூலம் கிடைக்கும் வருமானத்தில் கணிசமான சதவீதமொன்றினை பல்கலை கழக நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) நூலகத்தில் காணப்பட்ட பழைய மொடியூலத்தின் (Libsys) குறைபாடுகள் காரணமாக புதிய மொடியூலா ஒன்று 2014 நவம்பர் 01 பொருத்தப்பட்டிருந்த போதிலும் அத்திகதியில் காணப்பட்ட புத்தகங்கள் தொடர்பாக பௌதீக கணிப்பீடு ஒன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் 10 வருடத்தை விட மிகையான காலப்பகுதியில் புத்தகங்கள் தொடர்பாக இருப்பு கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்காமையால் குறைபாடுகளுடன் பழைய மொடியூலா வரை தகவல்களின் அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட புதிய மொடியூலவின் தகவல்களின் உண்மை தன்மையை உறுதிபடுத்த முடியாதிருந்தது அதே போல 18 கல்வி நிலையங்களில் நூலகங்கள் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டிருந்ததென என கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) திறந்த பல்கலைக்கழகத்தின் மத்திய புத்தக வினியோகப் பிரிவில் 2016 ஆண்டின் போது பொருத்தப்பட்டிருந்த புதிய கணிணி மென்பொருள் முறைமையில் ஒரு குறிப்பிட்ட தினத்தில் காணப்படும் பாடநெறி புத்தகங்களை சரியாக முறையில் இணங்காண்பதற்கு ஏற்ப அந்த முறைமையை நாளதுவரை ஆக்கப்பட்டிருக்காமையால் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பௌதீக இருப்பு மீதி மற்றும் மென்பொருள் முறைமையின் பிரகாரம் மீதி இடையே ரூபா 5,193,446 தொகை பெறுமதியான 28,748 புத்தகங்கள் இற்கான பற்றாக்குறையும், ரூபா 4,794,294 தொகை பெறுமதியான 30,580 புத்தகங்களுக்கான மிகையும் காணக்கூடியதாக இருந்தது.

(எ) மத்திய புத்தகங்கள் வினியோகிக்கும் பிரிவில் வருடாந்த இருப்பு கணிப்பீடு மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் மென் பொருள் முறைமையில் காணப்பட்ட ரூபா 424,500 தொகை பெறுமதியான 2,830 இற்கான புத்தகங்கள் பௌதீக ரீதியாக குறிப்பிட்ட பிரிவிற்கு வழங்கியிருந்த போதிலும் அந்த இருப்பு மத்திய புத்தக வினியோக அலகின் கணிணி முறைமையில் இருந்து அகற்றியிருக்கவில்லை.

(ஏ) அச்சிடும் தேவையினை சரியான முறையில் இனங்காணாமல் அச்சிடப்படுவதன் காரணத்தினால் 2015 ஆண்டளவில் 103,868 தொகை புத்தகங்கள் அகற்றப்பட்டிருந்ததுடன், 2018 மார்ச் 08 திகதியில் உள்ளவாறு கணக்காய்வு சந்தர்பத்தில் பயன்படுத்த முடியாத புத்தகங்களின் எண்ணிக்கை 39,007 தொகை ஆகக் காணப்பட்டது. அதே போல மீளாய்வாண்டு இறுதி அளவில் பல்வேறு பீடங்கள் மற்றும் கல்வி பிரிவுகளில் காலங் கடந்த புதத்கங்கள் எனக் கருதி அகற்றப்பட வேண்டிய புத்தக பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டு வந்துள்ளது. கணக்காய்வு திகதியாகிய 2018 ஜூன் 06 ஆம் திகதியளவில் காலங் கடந்திருந்த புத்தகங்கள் என ரூபா 11,426,630 தொகை கிரயத்தை உடைய 66,816 தொகை புத்தகங்கள் இனங்காணப்பட்டிருந்தன.

**4.3 நிதியங்கள் குறை பயன்பாடு**

40 பல்வேறு நிதியங்கள் தொடர்பாக மீளாய்வண்டு இறுதியில் உள்ளவாறு குறைபயன்பாடுடன் காணப்பட்ட மீதி ரூபா 24,293,376 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் 12 நிதியங்களில் காணப்பட்ட ரூபா 7,810,535 தொகை 10 வருடங்களாக பயன்படுத்தி இருக்கவில்லை.

**4.4 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிராந்திய மற்றும் கல்வி நிலையங்களில் மின்துண்டிப்பு ஒன்றின் போது பயன்படுத்தக் கூடிய விதமாக மின்பிறப்பாக்கிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவை செயற்படாமல் காணப்படல் மற்றும் கொள்திறன் போதியளவாக காணப்படாமையின் காரணமாக பயன்படுத்தி இருக்கவில்லை. குறிப்பிட்ட நிலையங்களின் அலுவல்களை வினைத்திறனுடன் நடாத்துவதற்காக அவ் இயந்திரங்களை திருத்தவதற்கு மற்றும் போதிய கொள்திறன் உள்ள மின் பிறப்பாக்கிகளை வழங்குவது தொடர்பாக முகாமையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய நிகழ்வு நிலை தொலை கல்விச் செயற்திட்டம் திறந்த பல்கலை கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட சந்தர்பத்தில் காணப்பட்ட செயற்படாத சொத்துக்கள் மற்றும் உரிய முறையில் பராமரிப்பு விடயங்கள் செய்யப்படாமையால் செயற்படாமல் போன பாரிய எண்ணிக்கையின் செயற்படாத சொத்துக்கள் தலைமை அலுவலகத்தில் மற்றும் பிராந்திய கல்வி நிலையங்களில் காணப்பட்டன. எனினும் அவற்றை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) 2017 ஆண்டின் போது அச்சகத்தின் பதிவேடுகளின் பிரகாரம் மொத்த கிரயம் ரூபா 66,499,117 ஆக காணப்பட்டதுடன் அச்சிடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை 48,654,337 தொகையாக காணப்பட்டது. அதன் பிரகாரம், ஒரு பக்கத்திற்கான சராசரி செலவு ரூபா 1.37 ஆக இருந்தது. குறிப்பிட்ட கட்டிடத்திற்கான வாடகை மற்றும் வேத்துரிமை (தனியுரிமைக் கட்டணம்) இற்கு கிரயம் ஒன்று உற்படுத்தாமல் மேற்கூறிய கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த கிரயத்தையும் உற்படுத்தியிருந்தால் ஒரு பக்கத்தின் கிரயம் அதை விட கிரயம் கூடி இருக்கும் . அச்சு கட்டளையிடுவதில் தாமதத்தின் காரணத்தினால் ஊழியர் மேலதிக நேரம் போன்ற மேலதிக கிரயமொன்று மேற் கொள்வதற்கு நேரிடுதல் அச்சுச் கிரயம் அதிகரிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நெருங்குதல்**

2017 ஆகஸ்ட் 14 திகதி என்ஜி/எஸ்பீ/எஸ்டீஜி/17 இலக்கம் கொண்ட நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரினால் வெளியிடப்பட்ட கடிதம் மற்றும் ஐக்கிய நாடுகளின் ஆண்டு ‘‘2030 நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டி இருப்பதுடன் அதன் பிரகாரம் மீளாய்வாண்டு தொடர்பாக திறந்த பல்கலை கழகம் தனது நோக்கெல்லையின் கீழ் வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்து நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டிருந்தது.

எனினும் அந்த குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக செயல் நடவடிக்கை மற்றும் கூட்டினைந்த திட்டங்களின் உரிய செயற்பாடுகள் உள்வாங்கியிருந்த போதிலும் குறிப்பிட்ட கருமங்களை நிறைவேற்றிக் கொள்ளலின் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது என செயலாற்றுகை அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

## 6. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

கடந்த 4 ஆண்டுகளின் போது 40 உள்ளக கணக்காய்வு ஐய வினாக்கள் வழங்கியிருந்ததுடன் அவற்றி கணக்காய்வு திகதியாகிய 2018 ஆகஸ்ட் 24 திகதி வரை 05 ஐய வினாக்களுக்காக மாத்திரம் பதில் அனுப்பியிருந்தது அதன் பிரகாரம் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம் கணக்காய்வு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளல் தொடர்பாக முகாமை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த நடவடிக்கை முறை

#### 6.2.1 பெறுகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகை திட்டத்தின் பிரகாரம் 2017 மார்ச் 01 அளவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என திட்டமிடப்பட்டிருந்த ரூபா 1,851 மில்லியன் தொகைக்கான 20 செயற்திட்டங்களில் மதிப்பீட்டு கிரயம் ரூபா 1,374 மில்லியன் கிரயத்தை உடைய 17 செயற்திட்டங்களின் பெறுகை அலுவல்கள் 2018 பெப்ரவரி அளவிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்வில்லை.

(ஆ) நூலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2016 நவம்பர் 14 ஆம் திகதி ரூபா 169.05 மில்லியன் தொகையொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய நாள்முதல் 12 மாதங்களில் தேசிய போட்டி அடிப்படையில் விலை கூறல் அழைக்கப்பட்டு ஒப்பந்தகாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரின் கடித்தின் பிரகாரம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 பெப்ரவரி அளவிலும் குறிப்பிட்ட வரைபுகள் தயாரிக்கப்பட்டு விலைகூறல் அழைக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு நிர்மாணவேலை ஒப்படைத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 பட்டமளிப்பு விழாவின் புகைப்பட எடுப்பதற்காக புகைப்பட நிலையம் ஒன்று தெரிவு செய்வற்காக 2017 மே முதல் 2017 செப்டம்பர் வரை 05 மாதங்கள் கழிந்துள்ளது. குறிப்பிட்ட பெறுகை முதலில் வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் திறந்த போட்டி அடிப்படை ஏற்படுத்துவதற்காக ரூபா 169,146 தொகை செலவிடப்பட்டு இரண்டு சந்தர்பங்களில் செய்தித்தாள் அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. எனினும் கால தாமத்தின் காரணமாக குறிப்பிட்ட காலத்தில் வேலையை முடிப்பதற்காக பல்கலைக்கழக பதவியினை மூலம் ரூபா 178,000 செலுத்தி குறிப்பிட்ட விடயத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்ததுடன் செய்தித்தாளில் அறிவித்தலுக்காக செலவிடப்பட்ட செலவு பயனற்ற செலவு ஒன்றாகியிருந்தது.

(ஈ) மதிப்பீட்டு கிரயம் ரூபா 3,431,305 தொகைக்கான நூலக கட்டிடத்தை நவீன மயப்படுத்தும் ஒப்பந்த வேலை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விலைகூறல்களை மதிப்பாய்வு செய்யும் போது அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.11(அ) பந்தியின் பிரகாரம் முடிவான அல்லது மிகவும் முக்கியமான விடயங்கள் தொடர்பாக விலைகூறல் தாரரினால் யதார்தமற்ற மதிப்பீடுகள் குறிப்பிட்டுள்ள போது 7.9.11 (ஆ) பந்தியின் பிரகாரம் வினவியுள்ள மதிப்பீடுகளின் உள்ளே அவர்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு விலைகூறல் தாரருக்கு இயலாது போகும் என தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அபிப்பிராயம் எனின் அந்த விலை கூறலை இரத்து செய்ய இயலும் எனினும் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படாமல் குறைந்த ரேட்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் ஒப்பந்த வேலையை வழங்குவதற்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது.

(ii) ஏதேனும் விலைகூறல் தாரர் சமர்பித்திருந்த மதிப்பீட்டின் பிரகாரம் வேலையை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தகாரர்களுக்கு இருக்கும் இயலுமை தொடர்பாக சிக்கல் நிலைமையொன்று காணப்படுமெனில் அந்த ஆபத்தினை குறைப்பதற்காக பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.11 (ஈ) இன் பிரகாரம் கூடிய பெறுமதியினை கொண்ட செயலாற்றுகை பிணை முறி ஒன்றினை (Performance Bond) வேண்டிநிற்க முடியும் எனினும் இந்த ஒப்பந்த வேலை தொடர்பாக அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(iii) உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த வேலை ஆரம்பிக்க வேண்டிய திகதி 2017 ஜுலை 10 திகதி ஆக இருந்ததுடன் அந்த நாள் முதல் 12 வாரங்களுக்குள் அதாவது 2017 அக்தோபர் 12 திகதி அளவில் ஒப்பந்த வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும் தெரிவு செய்யப்பட்டிருந்த ஒப்பந்தகாரர் மிகவும் முக்கியமன 03 கருமங்களை நிறைவேற்றாமல் ஒப்பந்த வேலையை இடையில் நிறுத்தியிருந்தது. அதேபோல ரூபா 171,565 தொகைக்கான செயலாற்றுகை பிணைமுறி 2017 நவம்பர் 10 திகதி காலவதியாகி இருந்ததுடன் அதனை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் குறிப்பிட்ட நட்டங்களை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

(உ) மதிப்பீட்டு கிரயம் ரூபா 4,494,118 தொகைக்கான நூலக கட்டிடத்தில் மீண்டும் மின் கம்பிகள் இழுக்கும் ஒப்பந்த வேலையின் உடன்படிக்கையின் பிரகாரம், 2016 மே 30 திகதி முதல் 60 நாட்களுக்குள் ஒப்பந்தவேலை பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும் 2018 மார்ச் 05 திகதி வரை குறிப்பிட்ட விடயத்தை பூர்த்தி செய்திருக்காததுடன் ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், 2016 செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி அளவில் ரூபா 224,705 தொகைக்கான செயலாற்றுகை பிணை முறியின் செல்லுபடியாகும் காலமும் முடிவடைந்திருந்த போதிலும் அதனை நீடிப்பு செய்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**6.2.2 ஒப்பந்த வேலை நிருவாகத்தின் குறைபாடுகள்**

பல்கலைக்கழகத்திற்காக ரூபா 45 மில்லியன் கிரயத்தை உடைய சூரிய பெனல் பொருத்துவதற்கான செயற்திட்டமொன்று நிர்மானிப்பதற்காக 2015 பெப்ரவரி 23 திகதி தனியார் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருந்ததுடன் அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 3.12.2 பந்தியின் பிரகாரம் முன்னைய தகைமைகள் தொடர்பாக உரிய முறையில் பரிசோதனை செய்யாமல் ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தமையால் குறிப்பிட்ட செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தது. எனினும் குறிப்பிட்ட செயற்திட்டத்தின் ஊடாக எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக மாற்று வேலைத் திட்டமொன்று தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தியிருந்ததாகவும் கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

## 6.3 பாதீட்டு கட்டுபாடு

பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகள் உடன் இணக்கஞ் செய்த போது 40 சதவீதம் முதல் 1,356 சதவீதம் வரை பொருண்மையான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுபாடு கருவி ஒன்றாக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6.4 தீர்கப்படாத கணக்காய்வு பந்திகள்

2012 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு இறுதித் தடவையாக மேற்கொள்ளப்பட்டிருந்த மீள்மதிப்பீடு உரிய முறையில் நிறைவேற்றப்பட்டிருக்காமை தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் இவ் அறிக்கை திகதி வரை சரி செய்திருக்கவில்லை .

## 7 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமை மற்றும் கட்டுபாடு குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுபாடு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) உள்ளக கணக்காய்வு | நிறுவனத்தின் ஆபத்தினை அடிப்படையாக கொண்ட உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்படாமையால் வருமானங்கள், செலவுகள் உட்பட அனேகமான பரப்புகளில் குறைபாடுகள் தொடர்ச்சியாக காணப்படல். |
| (ஆ) இருப்பு கட்டுபாடு | பிராந்திய மற்றும் கல்வி நிலையங்களில் இருப்பு மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவற்கு இயலுமான விதத்தில் கணிணி மென்பொருள் முறைமையொன்று நிறுவி இருக்காததுடன் முறைசார் விதமாக இருப்பு பதிவேடு பேணப்பட்டிருக்காமை. |
| (இ) பெறுகை மற்றும் ஒப்பந்த வேலை கட்டுபாடு | i. முறைசார் விதமான பெறுகை நடைமுறையொன்று கடைபிடித்தி ருக்காமை.<br>ii. நிர்மான வேலை அலுவல்களின் போது முறைசாராத விதமாக செயற்பட்டமையால் செயற்திட்டங்களை பூர்த்தி செய்தல் தாமதமாகியிருந்தமை. |
| (ஈ) வருமான முகாமைத்துவம் | i. உடன்படிக்கைகளை மீறியமையினால் பெற்ற வருமானத்தை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுத்திருக்காமை.<br>ii. மாணவ வருமானம் தொடர்பான தகவல்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய பொழிப்பு அறிக்கைகளைப் பெறக் கூடிய விதமாக முகாமைத்துவ தகவல்கள் முறைமை தயாரிக்கப்பட்டிருக்காமை. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | i. | ஆதனங்கள் ,பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் சரியான பெறுமதி மதிப்பீடு செய்யாமையால் நிலையான சொத்துக்களின் பெறுமதி சரியாக காணப்பட்டமை மற்றும் காணியை சட்டரீதியாக உரித்தாக்குவ அலுவல்கள் உரிய முறையில் நிறைவேற்றப்படாமை. |
| | | ii. | பண்டக் கணிப்பீடு அறிக்கைகளின் பிரகாரம் செயற்பட்டிருக்காமை. |
| (ஊ) | வாகன கட்டுபாடு | i. | வாகனங்களின் சம்பவக் குறிப்பேடு மற்றும் அட்டவணைகள் உரிய முறையில் பேணப்பட்டிருக்காமை. |
| | | ii. | எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யாமை. |